1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பரிசு பெறுபவர்களைப் பிரத்தியேகமாக வெளிநாட்டுக்கு அனுப்புகிற திட்டம் எதுவும் இல்லை.

காவல் நிலையங்களுக்கு தொலைபேசிகள்.

*814 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் நிலையங்கள் அனைத்திலும் டெலிபோன் வசதியளிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. பி. எஸ். மணியன்: 15 மைல், 20 மைல் தூரத்திற்கு ஒவ்வொரு காவல் நிலையத்தினுடைய எல்லையும் விரிவாக இருக்கிறது. குற்றங்கள் நடை பெறுகிற நேரத்தில் உடனடியாகத் தொடர்புகொள்ள முடிவதில்லை. ஆகவே, உடனடியாக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் இந்த ஆண்டே தொலைபேசி வசதி செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே 816 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் கிட்டத்தட்ட 450-க்கு மேற்பட்ட காவல் நிலையங் களுக்கு இந்தத் தொலைபேசி தொடர்பு இருக்கிறது. அவுட்-போஸ்ட் என்ற அளவில்கூட 175 இடங்களில் 15 அவுட்-போஸ்ட்களுக்கு இந்தத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கூறிய இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் எல்லா காவல் நிலையங்களுக்குத் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்துவதற்கு அரசு இன்றைய தினம் செயற்குறிப்பை ஆராய்ந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லாக் காவல் நிலையங்களுக்கும் டெலி போன் பெஸிலிடி செய்து கொடுப்பதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் ஆகும் என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை மாதங்கள் ஆகும் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது. விரைவில் அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சு. துரைசாமி: இந்தக் காவல் நிலையங்களில் டெலிபோன் அமைக்கும்போது, நகரங்களிலிருக்கும் காவல் நிலையங்களுக்கு முதலில் அமைக்கப்படுமா? அப்படியானால் திருப்பூரில் அப்படிப்பட்ட இடங்களில் விரைவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மீதமுள்ள எல்லா இடங்களிலும் தொலைபேசி வைப்பதற்கு அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. என். மருதாசலம்: காவல் நிலையங்கள் வைப்பதற்கு கோவையிலிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா? ஏற்கனவே இருந்த காவல் நிலையத்தைக்கூட சில இடங்களிலிருந்து எடுத்துவிட்டார்கள். அதை அங்கேயே வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உறுப்பினருடைய கேள்வியையே ஒரு விண்ணப்பமாக எடுத்துக்கொள்ளுகிறேன்.

திரு. கு. காமாட்சி: காவல் நிலையங்களுக்கு டெலிபோன் தொடர்பு வைப்பதோடு அந்தந்தக் காவல் நிலையங்களில் பணி புரிகின்ற தலைமைப் போலீஸ் அதிகாரியினுடைய இல்லங்களுக்கு, கூடுமானவரை முக்கியமான சில இடங்களிலாவது, டெலிபோன் தொடர்பு வசதி செய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்மிபுகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் காவல் நிலையங்களுக்கு நிறைவு செய்யப்பட்டபிறகு அதற்குமேல் இவைகளைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போதே 366 காவல் நிலையங்கள் வரையிலும் டெலிபோன் வசதி இல்லாமலிருக்கின்றன. இந்த நடப்பு ஆண்டில் எத்தனை காவல் நிலையங்களுக்கு டெலிபோன் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1972-73-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டப் பணிகள் செயல்படுவதற்கு முதல் படியாக 200 காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஐ.ஜி ஆப் போலீஸ் ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறார். அது ஆலோசனையில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: டெலிபோன் வசதி செய்து கொடுக்கும் போது ஹெவி டிஸ்ட்ரிக்ஸ் என்று சொல்லப்படுகிற, குற்றங்கள் அதிகமாக இருக்கும் சில மாவட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து அங்கே முதலில் டெலிபோன் வசதி செய்துகொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுகூட ஒரு நல்ல யோசனை. செயல்படுத்தலாம்.

திரு. கே. என். குமாரசாமி: 800 காவல் நிலையங்களில் டெலிபோன் வசதி இல்லாத காவல் நிலையங்களும் இருப்பதென்றால், அதற்குக் காரணம் பணச் செலவு அதிகமாகும் என்பதா? அதனால்தான் தாமதம் ஏற்படுகிறதா? அல்லது வேறு ஏதாவது காரணத்தின்மூலம் தாமதம் ஏற்படுகிறதா?

1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நிதி வசதி என்பது ஒன்று. அடுத்த படியாக அந்தத் தொலைபேசிகளை அமைப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் தொடர்பு ஏற்படுத்துவதற்கான சில கருவிகள் இவைகளைப்பொறுத்தும், இருக்கிறது. ஏற்கெனவே தொடர்புடைய தொலைபேசிகள் இருக்கும் இடங்களில் வைப்பது சுலபமாக இருக்கிறது. தொலைபேசித் தொடர்பே இல்லாத இடங்களில் வைப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் அனுசரித்துத்தான் படிப்படியாக இந்தக் காரியம் நடைபெற்று வருகிறது.

திரு. எம். தேவராசன்: நக்சல்பாரிகளை ஒடுக்குவதற்கு கூடலூர் மாவட்டத்தில் புதிதாக ஆறு காவல் நிலையங்கள் அமைப்பதாக அறிகிறேன். அவை காட்டுப் பகுதியில் இருப்பதால் டெலிபோன் வசதி மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, அரசு அந்தக் காவல் நிலையங்களுக்கு உடனடியாக டெலிபோன் வசதிகள் ஏற்படுத்தித் தருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நக்சல்பாரிகளை அடக்குவதற்கு மாத்திரமல்ல, பொதுவாக குற்றங்கள் நடைபெறாமலிருப்பதற்கும், நடைபெற்ற குற்றங்களை உடனடியாக அறிந்து கொள்வதற்கும் காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி இருப்பது இன்றியமையாத ஒன்றாகும். அந்த இன்றியமையாமையை இன்றைக்கு நிறைவேற்றுவதற்காக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதியும் இடம் பெறும்.

திருப்பூர் நகருக்கு புதைச்சாக்கடைத் திட்டம்

*815 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கத் தேவையான ஆய்வு செய்ய, ரூபாய் 50,000-க்கான ஒரு ஆய்வு மதிப்பீடு முதனிலை அறிக்கையுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு தலைமைப் பொறியாளர் அனுப்பிவைத்துள்ளார். ஆய்வு வேலைகளை குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று நடத்துவதற்கும் அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளு